


திருகோணமலை உப்புவெளி
பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# செல்வி. லக்ஷிகா ஜீவானந்தம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

05.01.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# செல்வி. லக்ஷிகா ஜீவானந்தம்

அவர்களின்

தோற்றம்
13.07.1988

## திதி நிர்ணய வெண்பா

மறைவு
06.12.2019

ஆண்டு விகாரி மார்கழி ஆறுதனில்
பூண்டதிதி வளர்பிறை தசமி சித்தாமிர்த உத்தரட்டாதி நட்சத்திரத்தில்
லக்ஷிகா ஜீவானந்தம்
இறைவனடி ஏகிய நன்னாளன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருகோணமலை

உப்புவெளி பண்ணை வீதியைப்

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# செல்வி.லக்ஷிகா ஜீவானந்தம்

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

*05.01.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

எமது குடும்பம் தனிலே
குட்டி தேவதையாய் வந்து
எம்மை எல்லாம் வழிநடத்தும்
ஒரு மகளாய் சகோதரியாய்
எம்முடன் முப்பத்தொரு ஆண்டுகள்
ஒற்றுமையாய், பலமாய், ஆதரவாய்
எமக்கென இருந்த உன்னை
இறைவனவன் தன் குழந்தை
என ஏற்றானோ அம்மா.....
உனது திருப்பாதங்களுக்கு
இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.



- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையின் பெய்வளை மடந்தை
பிறை நுதலளொடு மடனாய்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடியதனை நெருக்கிப் பெருக்கமாய் தோன்றும்
கோணமாமலையமர்ந்தாரே

## திருவாசகம்

யாதெனும் பிறப்பஞ்சேன் இறப்பதனுள் கென் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேட மண்ணனாள் வான் மிதித்துயிரேன்
தேனேயும் மலர்க் கொன்றைச் சிவனே எம் பெருமாள் எம்
மானே உன் அருள் பெறுநாள் என்றென்றே வருள்வதுவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவார் பளிங்கின் திரன்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவார் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளக்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். செல்வி லக்ஷிகா ஜீவானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழம்பெரும் நகரமாய் திகழும் திருகோணமலை தென்கயிலை ஆதி சிவனாரின் தாழ்பணிந்து திருஞான சம்பந்தர் வீதியிலே பிறந்து வாழ்ந்து வந்த கணேஸ் ஜீவானந்தம் அவர்களதும் திருகோணமலை உப்புவெளி மூன்றாம் கட்டையை பிறப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கோகுலம் அவர்களதும் இனிய இல்வாழ்வு தனிலே ஐந்து முத்துகளை பெற்றெடுத்தனர். அதிலே லாவண்யா, ஜனார்தனனின் இளைய சகோதரியும் சுதர்ஷிகா, ரூபிகா ஆகியோரின் மூத்த சகோதரியுமான வீட்டினுடைய மூன்றாவது குழந்தையாக 1988.07.13 அன்று பிறந்தவரே லக்ஷிகா ஜீவானந்தம்.

இவர் தனது சிறுவயதிலிருந்து தனது குடும்பத்துடன் சேர்ந்து தனது குழந்தை பராயத்தை கடந்தார். பின் தனது ஆறாவது வயதனிலே தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்திலேயே தனது கல்வி பயணத்தில் முதல் காலடியை எடுத்து வைத்து அங்கு தனது ஐந்து வருட ஆரம்பக் கல்வியை சிறப்பாக கற்றார்.

பின்னர் ஆறாம் தரம் தனிலே தனது சகோதரர்களோடு பாடசாலை செல்ல ஆசை கொண்டு தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தனது பாடசாலை பயணத்தை தொடர்ந்தார். இவர் தன்னால் இயன்றவரை சிறப்பாகவும் திறமையாகவும் தனது பாடசாலையிலே உயர்தரத்தில் வணிகப்பிரிவில் சித்தி பெற்று ஒரு சிறந்த நன்னடத்தை கொண்ட பாடசாலை மாணவி என பெயரும் கொண்டு பாடசாலை பயணத்தை நிறைவு செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அடுத்த கட்ட உயர்கல்விக்காக உயர்தொழில்நுட்ப கல்லூரியில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) எனும் கற்கைநெறியை தேர்ந்து எடுத்து அதற்காக தனது நான்கு ஆண்டுப் பயணத்தை மேற்கொண்டு அங்கே பல புதிய முகங்களுடன் சேர்ந்து நண்பர்கள் படை சூழ தனது கல்வியை நிறைவு செய்து கொண்டு, தொடர்ந்து தனது தொழில் முயற்சியிலேயே ஆரம்பக் கட்டமாக சமூக சேவைகள் திணைக்களத்தில் தொழில் பயிலுனராக இரண்டு வருடங்கள் பயிற்சி பெற்று அங்கும் நற்சான்று கொண்டு வெளியேறினார்.

பின்னர் 2013ம் ஆண்டு விழுதுகள் (CHRD) என்னும் நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தராக தனது கடமையை பொறுப்பேற்று அங்கே தன்னால் இயன்றவரை அனைவரது மனங்கவர்ந்த அன்பான சகோதரியாக, மகளாக இன்றுவரை திகழந்தார். அவர் தனக்கென பெயர் சொல்ல தனக்கென கண்ணீர் சிந்தக் கூடிய ஒரு பெரிய மக்கள் செல்வத்தை உருவாக்கினார். அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளையும் செய்தார்.

இவ்வாறாக தனது பெற்றோர், சகோதரர் போன்றோரின் முன்னேற்றத்திற்கு உயிரிலும் மேலாக போராடி அனைவரது உள்ளங்களிலும் மனம் கவர்ந்தவராக காணப்பட்ட செல்வி லக்ஷிகா ஜீவானந்தம் 29.11.2019 அன்று சுகயீன நிலையிலே வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு வாரம் அனைத்து மதப் பிரார்த்தனைகள், வைத்தியர்கள், தாதியர்களின் போராடுதல்கள் மத்தியிலும் 06.12.2019 அன்று மாலை 7.35 மணியளவில் இறைவன் எமது பொற்குழந்தையை தனது கரங்களால் தன்னிடம் அணைத்துக் கொண்டான் என்பதை நாம் அறிவோம்.

சுபம்

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா துயரம்

நிதமும் கேட்ட உந்தன் குரல்
நிம்மதி அற்ற நிலையில் கிடக்கிறது
விழுந்த இடம் இப்போது இடம் மாறி
போனது கல்லறையாய்!
உலகமே அழுகுரலால் உறைந்து போக
நீ மட்டும் பூமிக்கு உரமாக மாறி போனாய்
செல்ல சிறகே, காற்றின் அமுதே
மலர்ந்தாய் மீண்டும் பிறக்க மறு
ஜென்மமாக தாய்க்கு மகளாக பிறந்து வா
உன் வரவு உலகத்தின் இன்னொரு விடியலம்மா.....

## சகோதரர்கள் துயரம்

நாட்கள் முப்பத்தொன்று ஆனது
மண்ணுலகில் நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு!
உறவுகளை தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டாய்
எமையெல்லாம் அழவிட்டு
இறைவனை நாடி விட்டாய்
உன்னை எண்ணித் தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி, நினைவிழந்து, செயலிழந்து
நிற்கதியாய் நிற்கின்றோம் லச்சு.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்ரா துயரம்

பெறாமகளே
அன்ரா....! அன்ரா....! என்று
அழைப்பது இப்பவும்
என் செவிகளில் இனிக்கின்றனவே

தடையின்றி யாரோடும் நீ உரையாடுவாய்
உன் உரையின் ஒவ்வொரு வார்த்தையிலும்
அன்பிருக்கும் பணிவிருக்கும்
உன்னை நினைத்து நானும் வியப்பேன்.

## சித்தப்பா, சித்தி துயரம்

பேசிடவும் பழகிடவும் இனிமையான பெறாமகளே!
பொல்லாப்பு என்றும் கண்டதில்லை உன்னிடத்தில்
நேசமுடன் சிறியோர் முதலாய் முதியோர் வரை
நட்புடன் பழகி வந்து மனங்களில் நிறைந்தவளே!
ஆசி பலவும் உனக்கிருந்தும் அந்தகன் மட்டும்
ஆருமற்ற வேளையில் உன்னுயிரை பறித்தானோ!

## மாமா, மாமி துயரம்

தன்னடக்கம் புன்சிரிப்பு மரியாதை இவையோடு
தண்ணொளி வீசிடும் பார்வையும் கொண்டவளே!
சொன்னசொல் மாறாது கடிந்தொரு போதும்
சார்ந்தவரை பேசியதை நாமறியோம் நீ
தன்னிடத்தில் உள்ளவற்றை பிறருக்கு தருகின்ற
தாராள சிந்தையும் கொண்ட பெருமனமே!
என்னென்றும் பொங்கிய பூரிப்பும் நிலைக்கவில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார், உறவினர்கள் துயரம்

இந்நிலை உன்குடும்பம் அனைவரையும்
இக்கட்டான நிலைக்கு தள்ளியிருக்கின்றது
உங்கள் அனைவரின் அனைத்து சோகங்களிலும் - நாம்
உரிமையோடு கண்ணீரை தருகின்றோம்
எம் அஞ்சலி கண்ணீரை தவிர
எம்மால் என்ன தரமுடியும்.....

## நண்பர்கள் துயரம்

நலமாகி வருவாய் என்று தானே
எதிர்பார்த்துக் காத்திருந்தோம்
எங்களை ஏமாற்றிச் சென்றதேனோ

கடைசியாய் உன்னைச் சிரித்த
முகத்துடன் கண்ட
அதே இடத்தைக் கடந்து வருகையில்.....
எங்களை விட்டுப் பிரிந்து
சென்றாய் என்ற செய்தி
கேட்கும் படி விதி செய்தானே!

கனவில் கூட யாருக்கும் தீங்கு
நினைக்காத உன்னை அந்தக்
கடவுளுக்கும் பிடித்துப் போனதே!
உன் அடக்கமும் அமைதியும்
நிறைந்த குணத்தை
யாருக்குத் தான் பிடிக்காது
போகும்.....
உன்னைப் பறித்துக் கொண்டதால்
எங்களைப் பிரித்து விட்டதாய்
எண்ணி விட்டானோ!


noolaham.org | aavanaham.org

மரணத்தினால் கூட நம்மைப்
பிரித்து விட முடியாது
என்றாவது ஒரு நாள்
எங்கோ ஓரிடத்தில் சந்தித்துக்
கொள்வோம்
நம் நட்புக்கு என்றும் மரணமில்லை.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரும்ப நம் வாழ்வில் பெற முடியாதவை

1 .உடலை விட்ட உயிர்

2. பேசி விட்ட வார்த்தை

3. கடந்து விட்ட நேரம்

4. இழந்து விட்ட இளமை

5. தவற விட்ட கல்வி

## பஞ்ச விடயங்கள்

1.பஞ்சகண்ணியர்
அகலிகை, சீதை, தாரை, திரௌபதி,மண்டோதரி.

2.பஞ்சவாசம்
இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

3.பஞ்சாமிர்தம்
சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்.

4.பஞ்சபாண்டவர்
தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்.

5.பஞ்சசீலம்
கொல்லாமை, பொய்யாமை, கல்லாமை,காமமின்மை,இரவாமை.

6.பஞ்சதிராவிடர்
தெலுங்கர், திராவிடர், கன்னடர், மகாராஷ்டிரர், கூர்ஜரர்.

7.பஞ்சபட்சி
வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.பஞ்சபுராணம்

தேவராம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

9.பஞ்சரத்தினம்

வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்.

10.பஞ்சவர்ணம்

வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

11.பஞ்சாங்கம்

கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம்.

12.பஞ்சமூலம்

செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

13.பஞ்சபாதகம்

பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை.

14.பஞ்சபாணம்

முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம்.

15.பஞ்சாயுதம்

சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில்.

16.பஞ்சபரமோட்டி

அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்.

17.பஞ்சசிகை

தலை, உச்சி, கண், புருவம், முழங்கை.

18.பஞ்சதேவர்

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன்.

19.பஞ்சஸ்தலம்

காசி, சோமநாத், பூரி, இராமேஸ்வரம், வைத்தியநாத்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைத் தத்துவங்கள்

| | | |
|---|---|---|
| அழிவை தருவது | - | ஆணவம் |
| ஆபத்தை தருவது | - | கோபம் |
| இருக்க வேண்டியது | - | பணிவு |
| இருக்க கூடாதது | - | பொறாமை |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| கண்கண்ட தெய்வம் | - | பெற்றோர் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக்கூடாதது | - | துரோகம் |
| நம்பக்கூடியது | - | வதந்தி |
| நம்முடன் வருவது | - | புண்ணியம் |
| பிரியக்கூடாதது | - | நட்பு |
| மறக்க கூடாதது | - | நன்றி |
| மிக மிக நல்லநாள் | - | இன்று |
| மிகப்பெரிய தேவை | - | அன்பு |
| மிகக்கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| வந்தால் போகாதது | - | பழி |
| போனால் வராதது | - | மானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையின் 5 உண்மைகள்

மனிதர்கள் நல்ல எண்ணங்களை விரும்புவதில்லை, மாறாக நல்ல தோற்றத்தை மட்டுமே விரும்புவார்கள்...

நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்களே உங்களை அதிகமாக காயப்படுத்துவார்கள்!!!

நீங்கள் சந்தோசத்தில் இசையை ரசிப்பீர்கள், ஆனால் சோகத்தில் பாடலின் வரிகளை உணர்வீர்கள்...

மக்கள் பணத்தை மதிக்கும் அளவிற்கு மனிதர்களை மதிப்பதில்லை...

இந்த உலகத்தில் யாரும் உண்மையானவர்கள் அல்ல உன்னை பெற்ற தாயை தவிர...

## மனதுக்கு உயிரூட்டும் வார்த்தைகள்

எப்போதும் ஞாபகம்
வைத்துக்கொள்ளுங்கள்
இப்போது இருக்கும்
உங்கள் நிலை தான்
முடிவான ஒன்று
என இருக்காதீர்கள்.
இதை விட மிகச்சிறந்தது
உங்களை நோக்கி வர
காத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற மூன்று வழிகள்

ஒன்று மற்றவர்களை விட
அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்.

இரண்டு மற்றவர்களை விட
அதிகமாக பணியாற்றுங்கள்.

மூன்று மற்றவர்களை விட
குறைவாக எதிர்பாருங்கள்.

- வில்லியம் ஷேக்ஸ்பியர் -

எல்லா பறவைகளும்
மழைக் காலங்களில்
கூடுகளில் அடையும்..!!
ஆனால்
கழுகு மழையைத்
தவிர்க்க மேகத்துக்கு மேலாகப்
பறக்கும்..!!
நீ கழுகாக இரு.....

சிந்திக்க தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவை இல்லை
துன்பங்களை சந்திக்க
தெரிந்தவனுக்கு வாழ்க்கையில்
தோல்வியே இல்லை.....

உன் கை ரேகையை
பார்த்து எதிர்காலத்தை
நிர்ணயித்து விடாதே.....
ஏனென்றால்
**கையே இல்லாதவனுக்கு**
**கூட எதிர்காலம் உண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் சோதிப்பது
எல்லோரையும் அல்ல
உன்னைப் போல
சாதிக்க துடிக்கும்
புத்திசாலிகளை மட்டுமே.....

நமது பிறப்பு
ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால்
இறப்பு ஒரு சரித்திரமாக
இருக்க வேண்டும்.

- Dr.அப்துல் கலாம் -

'இல்லை' என்று
ஒரு போதும் சொல்லாதே
'என்னால் இயலாது'
என்று ஒரு நாளும்
சொல்லாதே
ஏனெனில் நீ வரம்பில்லா
வலிமை பெற்றவன்.

வெற்றியை சந்தித்தவன் இதயம்,
பூவைப் போல மென்மையானது!

தோல்வியை சந்தித்தவன் இதயம்,
இரும்பை விட வலிமையானது!

- சுவாமி விவேகானந்தர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபம் விஷம் பருகுவதைப் போன்றது
ஆனால் நம்பிக்கை உங்கள்
எதிரிகளையும் அழிக்கும் வல்லமை மிக்கது"

- நெல்சன் மண்டேலா -

கண்ணை விட்டு இமை
பிரியாது..
கடலை விட்டு அலை
பிரியாது..
பூவை விட்டு மணம்
பிரியாது..!
உன்னை விட்டு
எம் நட்பு என்றென்றும்
பிரியாது..!

- நண்பர்கள் -

வாழ்வு முழுவதையும் சோதனைகள்
சூழ்ந்திருந்தாலும், எப்போதும் ஒரு சிறு
வாய்ப்பு உங்கள் கண்முன்னே இருக்கும்
அதனை இனம்கண்டு பற்றிக்
கொள்ளுங்கள்.. நிச்சயம் வெற்றி
உங்களைப் பற்றிக் கொள்ளும்..

- STEPHEN HAWKING -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கற்ற பாடம்

நீ யாருக்கு உதவி செய்தாலும்
உனக்கு உதவிட யாருமில்லை.

யாருக்கு உண்மையாய் இருந்தாலும்
முடிவில் ஏமாற்றபடுபவன் நீயே.

நீ யாருக்கு நல்லது நினைத்தாலும்
உனக்கு நல்லது நடக்காது.

நன்றி இல்லாத மனிதர்களிடத்தில்
நன்றியை எதிர்பார்க்காதே.

நீ உனக்கா இரு
நீ நீயாக இரு.

## அம்மா

உயிர் எழுத்தில் 'அ' எடுத்து
மெய் எழுத்தில் 'ம்' எடுத்து
உயிர் மெய் எழுத்தில் 'மா' எடுத்து
அழகு தமிழில் கோர்த்தெடுத்த முத்து
'அம்மா'

உடலையும் உயிரையும் இணைத்துக் கொடுப்பதால்
உன்னை அழகுபடுத்துகிறது தமிழ்.

ஒரு அம்மாவின் கடைசி ஆசை...
என் கல்லறையின் மேல்
உன் பெயரை எழுதி வை...
நினைப்பதற்கு அல்ல...
அங்கும் உன்னை சுமப்பதற்கு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா

அப்பா என்பது
ஒரு அதிசயமான புத்தகம்
அது கிடைக்கும் வயதில்
நம்மால் அதை
புரிந்து கொள்ள முடிவதில்லை
புரிந்து கொள்ள
நினைக்கும் போது
அது கிடைப்பதில்லை.

அன்பை உள்ளே வைத்து
கொண்டு எதிரியை
போல்
தெரியும் ஒரே உறவு
"அப்பா"..!

மனைவிக்கு இது பிடிக்கும்
பிள்ளைக்கு அது பிடிக்கும்
என்று வாழும் அப்பாவிற்கு
தனக்கு எது பிடிக்கும் என்பது
மறந்து விடுகின்றது.

## வாழ்க்கையில் மறக்கவே 3பேரை கூடாது

1) கஷ்டத்தில் உதவியவன்
2) கஷ்டத்தை உண்டாக்கியவன்
3) கஷ்டத்தில் உதவாதவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் - பகை - நோய் இவை மூன்றும் இல்லாமல்
குடிசையில் வாழ்ந்தாலும்
அவனே மிகப்பெரிய செல்வந்தன்!

பணமில்லாதவனை விட
புன்னகை இல்லாதவன் தான்
உண்மையில் ஏழை!

"கோபத்தில் ஒரு முடிவும் எடுக்காதே"
"மகிழ்ச்சியில் ஒரு வாக்கும் கொடுக்காதே"
"அழுகையில் ஒருவரையும் நம்பாதே"

## மனித வாழ்க்கை பற்றி.....

பிரசவ வலியை விட பெரிய
வலி ஏதேனும் உண்டா..?
ஒன்று உள்ளது.
அது உன் தாயை நீ முதியோர்
இல்லத்தில் விடும் போது
அவள் அடையும் வலி.

நடந்து முடிந்த எதையும்
ஒரு போதும் கவனிக்காதே
எதை செய்து முடிக்கவேண்டும்
என்பதில் மட்டும்
கவனமாக இரு...

விழுதல் என்பது,
வேதனை!
விழுந்த இடத்தில்,
மீண்டும் எழுதல் என்பது,
சாதனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பிறருக்கு செய்து
மற்றொருவர் மூலமாக நமக்கே
வந்து சேரும்!
அது உதவியாக இருந்தாலும் சரி
துரோகமாக இருந்தாலும் சரி.

தட்டி
பறிப்பவன்
வாழ்ந்ததில்லை
விட்டு
கொடுப்பவன்
வீழ்ந்ததில்லை.

உனக்கான மரியாதையை
கையில் இருக்கும்
படிப்பை விட....
பையில் இருக்கும்
பணமே தீர்மானிக்கிறது..!

நம்மை ஒருவர்
மதிக்கவில்லை என
நினைப்பது முட்டாள்தனம்
அவருக்கு நம் மதிப்பு
தெரியவில்லை என்பதே
உண்மை ஆகவே யாரும்
மதிக்கவேண்டும் என்று
எதிர்பார்க்காதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் நம்பி வாழாதே..!
தன்னோடத் தேவைக்காக
மட்டுமே உன்னோடு
உறவு வைத்துக்
கொள்ளும் உலகம்...!
தேவைகள் முடிந்ததும்
கண்டிப்பாக தூக்கி
ஏறியப்படுவாய்....!

உனக்கு இன்று ஏற்பட்ட
துன்பங்களுக்காக
மனம் வருந்தாதே...
ஏனெனில்
அது தான் உனக்கு
வருங்காலத்தில் எதையும்
தாங்கும் வலிமையான
இதயத்தை
அளிக்கபோகிறது.

மற்றவர்களிடம் இருப்பவை
எல்லாம் நம்மிடம் இருக்கின்றனவா
என்று பார்க்கின்றோமே தவிர..
நம்மிடம் இருப்பவை எத்தனை
பேரிடம் இல்லை என்பதை
பார்க்கத் தவறி விடுகின்றோம்..!

நெருங்கியவர்கள் ஏற்படுத்தும்
அவமானங்கள் தான்,
வாழ்ந்து காட்ட வேண்டும்
என்ற வெறியை
மனதில் வளர்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்காகவும் உன்
தன்மானத்தை இழக்காதே
பிறகு யாராலும் அதை
மீட்டு தர முடியாது.

துரோகங்கள் நமக்கு
கற்றுக் கொடுப்பவை
ஒன்று தான்
சற்றே சுயநலமாய்
இருந்திருக்கலாம்
என்று.

நேர்மையாக
இருப்பவர்களைத் தான்
வாழ்க்கை அதிகம்
ஏமாற்றி விடுகின்றது...!

வாழ்க்கைக்கு ஓர் உயர்ந்த
லட்சியம் இருக்க வேண்டும்..!
லட்சியம் எவ்வளவு உயர்வாக
உள்ளதோ...
அவ்வளவு உயர்வாக
வாழ்க்கையும்
இருக்கும்..!

ஆயிரம் முறை தோற்றாலும்,
லட்சியத்தை கைவிடாதே!
நிச்சயம் ஒரு நாள்
வெற்றி கிடைக்கும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தேவை பிறருக்கு
இருக்கும்
வரை, அவர்களின்
விருப்பட்ட வரிசையில் நீ
இருப்பாய்...

உண்மை இல்லாத
உறவுகளுடன்
நாம் ஒட்டியிருப்பதை விட
ஒதுங்கி இருப்பதே நல்லது.

சில உறவுகளிடத்தில் யோசித்து
பேச வைக்கும்
சில உறவுகளிடத்தில் பேசவே
யோசிக்க வைக்கும்.

திருத்திக் கொள்ள முடியாத
ஒரே ஒரு தவறு...
நம்மை காயப்படுத்திய
உறவுகள் மீது மீண்டும்
நாம் அன்பு காட்டுவது தான்!

துன்பத்தில் இருப்பவனை
உடனே போய் பார்...
செல்வத்தில் இருப்பவனை
கூப்பிட்டால் மட்டுமே
போய் பார்.

கடன் கொடுத்து பார்
நீ எவ்வளவு முட்டாள் என்று
தெரியும்...
கடன் கேட்டு பார் அடுத்தவன்
எவ்வளவு புத்திசாலி என்று
உனக்கே புரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடலும் சமூகவியலும் பற்றிய பொதுவான தகவல்கள்

1. இலங்கையின் பிரதான எரிபொருள் - விறகு
2. இலங்கையின் முதலாவது விவசாய குடியேற்ற திட்டம் கல்ஓயா
3. பரப்பளவில் கூடியளவு நீர்வீழ்ச்சியைக் கொண்ட நாடு இலங்கை
4. உலகில் வெந்நீர் ஊற்றுக்கள் கூடுதலாக உள்ள நாடு ஐஸ்லாந்து
5. புவியில் ஆகக்கூடுதலாக உள்ள வாயு - ஐதரசன்
6. காடுகள் உருவாக்க முடியாத மரங்கள் - யுகலிப்ட்ஸ்
7. புவியின் மேற்பரப்பில் நீரினால் மூடப்பட்ட பகுதி - 71%
8. இலங்கையை தப்ரபேன் என தனது தேசப்படத்தில் குறித்தவர் - தொலமி
9. சிங்கராஜாக்காடு அமைந்துள்ள மாவட்டங்கள் இரத்தினபுரி, காலி, மாத்தறை.
10. இலங்கையில் சுற்றாடல் அதிகார சபை தலைமையகம் உள்ள இடம் - கொழும்பு
11. நிலத்தோற்றத்தை மாற்றி அமைப்பன - ஆறுகள்
12. புவியின் முழுப் பரப்பில் கடல்களின் வீதம் - 70.8%
13. ஒரு மண்டலம் என்பது - 48 நாட்கள்
14. உலகின் ஆயுள் - 5400 லட்சம் ஆண்டுகள்
15. வாழை மரம் அல்ல - உயரமாக வளரும் செடி
16. அத்திக்காய் என்பது - அத்திப்பூவாகும்
17. முந்திரிக் கொட்டை என்பது - பழம் ஆகும்
18. அனைத்து காலநிலையிலும் மலரும் பூ - லில்லிப்பூ
19. 12 வருடங்களுக்கு ஒரு முறை மலரும் பூ - குறிஞ்சி
20. அனைத்து காலங்களிலும் உயிர்வாழக்ககூடிய பிராணி நாய்
21. விதை இல்லாத ஒரே பழம் - அன்னாசி
22. உணர்ச்சியை வெளிக்காட்டும் மரம் - தூங்குமூஞ்சி மரம்
23. உலகளாவிய ரீதியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் நகரம் - கால்கரி (கனடா)
24. உலகில் முதன் முதல் தோன்றிய தாவரம் - நீலப்பசும்பாசி
25. புதிய வனவில காட்சிப் பூங்கா - அம்பாந்தோட்டை ரிதியகம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கின விநோதங்கள்

1. முலையூட்டிகளிடம் காணப்படும் தனிச்சிறப்பு - தாயிடம் பால் குடித்தல்
2. நீந்தத் தெரியாத விலங்கு மூன்று இரைப்பைகள் உள்ள விலங்கு - ஒட்டகம்
3. மிக வேகமாக செல்லும் பாம்பினம் - பிளாக்மாம்பா
4. மூளை இல்லாத மீன் இனம் - நட்சத்திர மீன்
5. 27,000 சுவை நரம்புகள் உள்ள மீன் இனம் - Cat Fish
6. ஒரு வருடம் ஆணாகவும், ஒரு வருடம் பெண்ணாகவும் வாழும் - ஈரிதழ்ச்சிப்பி, Oyster
7. கருவுறாத முட்டைகளை இடும் உயிரினம் - குளவி
8. எருமைக்கும் பசுவுக்கும் இடையே பிறக்கும் கலப்பின் விலங்கு - திமிதுன்
9. பூச்சியினங்களில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் உயிரினம் - வண்டு
10. முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் - மீன்
11. நாக்கை அசைக்க முடியாத விலங்கினம், மூக்கில் பல் உள்ள விலங்கினம் - முதலை
12. பதினொரு வாரங்கள் கழித்து கண் திறக்கும் விலங்கு - பிளாடிபஸ்
13. நடக்கத் தெரிந்த பறக்கும் பூச்சி, ஐந்து கண்கள் கொண்ட உயிரினம் - வெட்டுக்கிளி
14. பறக்கவும், தாவவும் தெரியாமல் நடந்தே செல்லும், மோப்பம் பிடிக்கும், இறக்கை இல்லாத பறவை - கீவி
15. அதிக எடையுள்ள பறக்கும் பறவை - Mute Swan
16. கண்கள் இல்லாத உயிரினம், அதிக முட்டையிடும் உயிரினம் கறையான்
17. எப்போதும் நீந்திக் கொண்டிருக்கும் மீனினம் - சுறா
18. சுற்றுச் சூழலுக்கு ஏற்ப நிறத்தை மாற்றுவது - Gold Fish
19. மூன்றாவது கண் உள்ள பிராணி - ஸ்பினோடயூன்
20. அதிக குரலிடும் விலங்கு - ஹௌவர் குரங்கு
21. மிகச் சிறிய இதயம் உள்ள விலங்கு - சிங்கம்
22. இறக்கையில்லா பூச்சி - பேன்
23. பித்தப்பை உள்ள ஒரே மான் இனம் - கஸ்தூரி மான்
24. மனிதனைப் போல நிமிடத்திற்கு 12-20 தடவைகள் மூச்சு விடும் விலங்கு - ஆடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. வெள்ளை நிறத்தைக் கண்டு பயப்படும் விலங்கு - புலி
26. கடற்பஞ்சு என்பது - மிக எளிய விலங்கினம்
27. உலகில் மிக மெதுவாக நடக்கும் பாலூட்டி
கடல் ஆமை (0.17 மைல்வேகம்)
28. ஓமோன் இல்லாத உயிரினம் - பக்றீரியா
29. உயிரினங்களில் தூங்காதது, தனது எடையைப் போல ஐம்பது மடங்கு எடையை தூக்கக் கூடிய உயிரினம் - எறும்பு
30. மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
31. தரைமீது வேகமாக ஓடக்கூடிய பிராணி
சிறுத்தை மணிக்கு 96-100km வேகம்
32. கண்களின் அமைப்பின் பிரகாரம் தன் நான்கு கால்களையும் பார்க்கக் கூடிய விலங்கு - கழுதை
33. பல் இல்லாத முலையூட்டி - தேவாங்கு
34. மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப்பெற்ற பறவை - மரங்கொத்தி
35. காலைப்பிடித்துத் தூக்கினால் இறக்கும் பிராணி - தாரா
36. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் - ஈசல்
37. நாய்க் குடும்பத்தில் உள்ள மிகச் சிறிய உயிரினம் - நரி
38. 1kgபட்டு நூலுக்கு அழிக்க வேண்டிய பட்டுப் பூச்சிகள் 15000
39. பற்கள் இல்லாத உயிரினம் - ஆமை
40. வாசனையைக் கொண்டே தன் இரையை அறியும் பறவை கீவி
41. பட்டாம்பூச்சிக்கு 12000கண்கள் உள்ளன.
42. கம்பளிப் பூச்சிக்கு 2700 தசைகள் உள்ளன.
43. காகமே இல்லாத நாடு - நியூசிலாந்து
44. குரைக்க தெரியாத நாய் - டிங்கோ
45. மனிதனுடன் நெருக்கமான முதல் நாயினம் - டிங்கோ
46. உலகில் முதலில் தோன்றிய பாலூட்டி - மனிதக் குரங்கு
47. பிளேக் நோயைப் பரப்பும் விலங்கு - எலி
48. யானைகள் அநாதைகள் நிலையம் உள்ள நாடு - இலங்கை
49. மனிதன் வளர்த்த முதல் விலங்கு - ஆடு
50. மனிதனைப் போல கனவு காணும் விலங்கு - நாய்
51. பறவைகள் கூடு கட்டாத மரம் - இலந்தை மரம்
52. கோழி முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சு வெளிவர எடுக்கும் காலம் - 11/2 நாட்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. கூடிய மோப்ப சக்தி உடைய பறவை - கழுகு
54. நின்றபடி தூங்கும் உயிரினம் - குதிரை
55. நின்றபடியே அடைகாக்கும் பறவை - பென்குவின்
56. நத்தைகளின் பற்கள் - 14175
57. பாலூட்டியில் குறட்டை விடாத உயிரினம் - கொரில்லா
58. இலங்கையில் டொல்பின் அதிகளவில் காணப்படத்தக்க கடல் வளம் - கல்பிட்டி

## மொழியும் கலை இலக்கியமும்

1. நவீன நாடகத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு
கிறீஸ்
2. இலங்கையின் தமிழ் நாடகத் தந்தை
கலையரசு சொர்ணலிங்கம்
3. தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் - வ.சு.வே.ஐயர்
4. உலகின் முதல் சிறுகதை ஆசிரியர் - வாஷிங்டன் இர்வில்
5. ஈழத்து முத்தமிழ் முனிவர் - சுவாமி விபுலானந்தர்
6. முதன் முதல் கலைக்களஞ்சியம் வெளியிட்ட நாடு
பிரான்ஸ்
7. தமிழில் தோன்றிய முதலாவது இலக்கண நூல்
தொல்காப்பியம்
8. தமிழில் தோன்றிய முதலாவது குழந்தைகள் பத்திரிகை
பாலதீபிகை (1840)
9. ஆகக் கூடிய பதிப்புரிமை பெற்ற புத்தகம் - கின்னஸ்
10. தமிழில் வெளியான முதலாவது நாவல்
பிரதாப முதலியார் சரித்திரம்
ஆசிரியர் - வேதநாயகம் பிள்ளை
11. இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல்
அஸன் பேயுடைய சரித்திரம்
12. உலகப் பொதுமறை என அழைக்கப்படும் நூல் - திருக்குறள்
13. தமிழில் வெளியான நூல்களில் ஆகக் கூடுதலாகப் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் - திருக்குறள்
14. திருக்குறள் முதலில் மொழி பெயர்க்கப்பட்ட மொழி
இலத்தீன்
15. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்தவர்
G.U. போப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. திருக்குறளில் அதிகமாக பயன்படுத்தப்பட்ட எழுத்து - ன்
17. உலகின் முதல் அகராதி-Explaining Words, Analysing Cractors (சீனமொழி ஆசிரியர் - ஹ்செவ் செ'ன்
18. உலகில் முதலில் தோன்றிய இலக்கியம் - இராமாயணம்
19. உலக மொழிகளின் தாய் - சமஸ்கிருதம்
20. ஹவாய் மொழியில் உள்ள எழுத்து வடிவங்கள் - 13 H,K,L,M,N,O,P,Q,W,A,E,I,U
21. தமிழ் மாமுனி - திருவள்ளுவர்
22. தமிழ் மூதாட்டி - ஔவையார்
23. தமிழ் தென்றல் - திரு. வி. க
24. தமிழ் தாத்தா - உ.வே. சாமிநாதய்யர்
25 தமிழ் நாடக தலைவர் - சங்கரதாஸ் சுவாமிகள்
26. தமிழ் பெர்ணாட்ஷா - Dr. மு. வரதராசனார்
27. தமிழ் வால்டர் ஸ்காட் - கல்கி
28. தமிழ் மாணவர் - வீரமா முனிவர்
29. தமிழ் குடிமகன் - சாத்தையா
30. தமிழ் கடல் - ராய. சொ
31. தமிழ் காவலர் - கி.ஆ.பெ. விசுவநாதம்
32. தமிழ் அறிஞர் - கி.வா. ஜகந்நாதன்
33. தமிழ் இசைக்குயில் - பி.சுசிலா
34. தமிழ் கவிக்குயில் - M.S. சுப்புலட்சுமி
35. தமிழ் சிறுகதை மன்னன் - புதுமைப்பித்தன்
36. முத்தமிழ் வித்தகர் - விபுலானந்த அடிகள்
37. பெருந் தொகை எனப்படுவது - அகநானூறு
38. குடிமக்கள் காப்பியம் எனப்படுவது - சிலப்பதிகாரம்
39. முல்லைக் கொடிக்கு தேர் கொடுத்த மன்னன் - பாரி
40. முதல் நாவல் - சைரோ பீடியா
41. தமிழ் சிற்றிலக்கியங்கள் - 96
42. உலகின் முதலாவது தமிழ்ப் புத்தகம் - வணக்கம்
43. முது தமிழ்ப் புலவர் எனப்படும் ஈழத்துப் புலவர் - நல்லதம்பி
44. தமிழில் முதலாவதாக வெளிவந்த வார இதழ் இராச விருத்தி போதினி - 1855
45. தமிழில் முதலாவதாக வெளிவந்த நாளிதழ் தினவர்த்தமானி - 1856


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணக் கோலங்கள்

1. பழுப்பு - கோதுமை மா உற்பத்திப் பெருக்கம்
2. பசுமைப் புரட்சி - விவசாய உற்பத்திப் பெருக்கம்
3. வெண்மைப் புரட்சி - பால் உற்பத்திப் பெருக்கம்
4. நீலப்புரட்சி - மீன், கடல், உயிர், உற்பத்தி பெருக்கம்
5. மஞ்சள் புரட்சி - எண்ணெய் வீதம், தேன் உற்பத்தி பெருக்கம்
6. மண்ணிறபுரட்சி - மரபுசாரா எரிபொருள் பெருக்கம்
7. நீலப்புத்தகம் - பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கைகள்
8. மஞ்சள் புத்தகம் - பிரான்ஸ் அரசாங்க அறிக்கைகள்
9. கிரே/சாம்பல் புத்தகம் - ஜப்பானிய, பெல்ஜிய அரசாங்க அறிக்கைகள்
10. ஒரேஞ் புத்தகம் - நெதர்லாந்து அரசாங்க அறிக்கைகள்
11. வெள்ளைப் புத்தகம் - போர்த்துக்கல், ஜேர்மனி, சீன அரசாங்க அறிக்கைகள்
12. பச்சைப் புத்தகம் - இத்தாலிய, ஈரானிய அரசாங்க அறிக்கைகள்
13. சிவப்பு புத்தகம் - ஒரு நாட்டில் தடைசெய்யப்பட்ட நூல்
14. வெள்ளைப் புத்தகம் - இந்திய அரசாங்க அறிக்கைகள்
15. சிவப்பு புள்ளி விபர அறிக்கை அழிவு, ஆபத்து, விலங்கு, தாவரம் பற்றியது
16. Red Collar Job - வேட்டையாடல், மீன்பிடித்தல் போன்றன
17. Blue Collar Job - அதிக உடல் உழைப்பு தேவைப்படும் தொழிற்சாலை வேலை
18. Pink Collar Job - வர்த்தகம், வங்கி போன்றசேவைத்துறை
19. Red Data book/செந்தரவு புத்தகம் - உலகில் அழியக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய அரிய வகை உயிரினங்கள் பற்றிய குறிப்புக்கள், விளக்கங்கள் அடங்கிய புத்தகமாகும்.
20. நீல மாளிகை - தென்கொரிய நாட்டின் அதிபர் மாளிகை
21. வெள்ளை மாளிகை - அமெரிக்க நாட்டின் அதிபர் மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

தாயின் கருவோடு துளிர் விட்ட போதே
உயிரின் பயணம் உருவானது
மண்ணின் கருவோடு உடல் மீண்ட பின்பும்
மனிதன் எண்ணம் தொடர்கின்றது
ஒவ்வொரு மனிதன் வாழ்வும் ஒரு பயணம் என்பதை அறிவீர்
அதன் காலம் என்ன நேரம் என்ன எவர் தான் இங்கு அறிவார்
முதல் எதுவோ, முடிவெதுவோ
விதி எழுதும் விடை எதுவோ
மதி எழுதும் வழி அதனுள் சென்றுவிடு.

**(தாய், சகோதரர்கள்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " நன்றி உரைக்கின்றோம் "

எங்கள் அன்புச் சகோதரியின் அமரத்துவம் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்கள், ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலமாக அனுதாபங்களை கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரம் மூலம் அனுதாபங்களை வெளிப்படுத்திய அன்பு உள்ளங்கள், அன்றிலிருந்து இன்று வரை உபசரணை வழங்கியவர்கள், உதவி புரிந்தவர்கள், ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், இன்று நடைபெறும் கிரியைகளை நன்காற்றிய அந்தணப் பெருமக்களுக்கும், இதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரணம் ஆத்மசாந்தியிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இச் சிறப்புமலரை வெளியிட்ட எமது அன்புச் சகோதரியின் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்

பண்ணை வீதி,
உப்புவெளி,
திருகோணமலை.

*இங்ஙனம்*
**- குடும்பத்தினர் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

செல்வி. **லக்ஷிகா ஜீவானந்தம்**

அவர்களின்

தோற்றம்
13.07.1988


## திதி நிர்ணய வெண்பா

மறைவு
06.12.2019


ஆண்டு விகாரி மார்கழி ஆறுதனில்
பூண்டதிதி வளர்பிறை தசமி சித்தாமிர்த உத்தரட்டாதி நட்சத்திரத்தில்
லக்ஷிகா ஜீவானந்தம்
இறைவனடி ஏகிய நன்னாளன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ,

அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்.

எதற்காக நீ அழுகிறாய்?

நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்

எனது படைப்பின் சாராம்சமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org